திருக்கோட்டூர் தலபுராணம்

பதி. 5 - 1955

திருக்கோவூர் தல புராணம்
பதி-5 1955



திருப்பணிக்கு பின்னுள்ள முன் தோற்றம்

Q23:38-2ll93.Tk 'N55

உ

சிவமயம்

# அணிந்துரை.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி – பகவன் முதற்றே யுலகு" என்ற அறிவுரை எம் மதத்தவரும் கண்ட உண்மை யாகும். சிறந்த நீதி நூல்களும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "வையந்தோறுந் தெய்வந்தொழு" என்றும் "தெய்வமிகழேல்" என்றும் இடித்துக் கூறிப் போந்தனர். கடவுளை உருவத்திலே வணங்குவார் போலவே அருவமாக வழிபடும் சில மதத்தினரும், சில தலங்களை முக்கியமாகக்கொண்டும், யாத்திரை செய்தும், கோயில் களைக் கட்டியும், அங்கு சென்று வழிபடுகிறார்கள் என்பது உலக மறிந்ததே.

வேதாகம முறையை நிலைநிறுத்த அவதாரம் செய்த பெரியோர்கள் சைவ சமய உண்மையை அற்புதாதிசயங் களால் பரவச்செய்து தலங்கள்தோறும் சென்று வழிபட்டுத் திருப்பாடல்களைப் பாடியுள்ளார்கள். இந்தக் **கோட்டூர் திருஞானசம்பந்தர்** தேவாரப் பதிகம் பெற்றதாகும். இக் காலத்தில் போற்றுவாரின்மையால் அநேக தலபுராணங்கள் கிடைக்காமல் மறைந்தன. கிடைத்ததும் சிதைந்துள்ளன பல. அருமையாகவே நல்ல நிலையில் நமக்குக் கிடைக்கும் புராணங்கள் மிகச் சிலவே.

இத்தலபுராணம் திருக்களர், சிவநேசச் செல்வர் சாமிநாத வாத்தியார் அவர்களால் அரிதில் தேடி அச்சிடப் பட்டது போற்றத்தக்கதாகும்.

இது சிவ சரிதமானமையால் பக்தர்கள். எழுதியவனது சைவநூலுணர்வு. கல்வியறிவு முதலியவற்றை எள்ளளவும் நோக்காது சிவகதையைப் படித்தின்புறுவார்கள் என்னும் பெருந்துணிவு பற்றி எழுதப்புகுந்ததே யன்றி வேறில்லை.

இத்தகைய அரிய பணியில் என்னை ஈடுபடுத்திய பெருந்தகைமைக்கு சென்னை அரசாங்க இந்து அறநிலையப் பாதுகாப்பாளருக்கும், திருக்கோயில் பொறுப்பேற்று நடத்திவரும் தர்மகர்த்தா பூவனூர் உயர்திரு. **P. சுப்பையா முதலியார்** அவர்கட்கும், நிர்வாக அதிகாரி உயர்திரு. **S. நாகசுப்பிரமணியம்** அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

இப்பணியில் எனக்குத் தோன்றாத் துணையாயருளும் தேன்மொழியம்மை பாகராம் **கொழுந்தீசர்** திருவடிகளைப் போற்றுவன்.

*இவ்வண்ணம்,*
*திருவடிக்கன்பன்,*
**ப. இராமநாதன்.**



திருப்பணிக்கு பின்னுள்ள பூரா தோற்றம்

**திருக்கோட்டூர்:-** கொழுந்தீசர் சிவாலயம்.

**தல அமைப்பு:-** தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலூகா, கோட்டூர் கிராமம், மன்னார்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து கற்சாலை வழியாய் திருத்துரைப்பூண்டி மார்க்கத்தில் 9 மைலிலும், திருத்துரைப்பூண்டியிலிருந்து மன்னார்குடி மார்க்கத்தில் 8 மைலிலும் உள்ளது. நெய்யூர்தி (மோட்டார்) வசதியுண்டு. ஆலயம் சாலையிலிருந்து கிழக்கே ஒரு பர்லாங்கிலுள்ளது.

**ஆறு:-** முள்ளியாறு என வழங்கும் முனிநதி கோயிலுக்கெதிரில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓடுகிறது. இது ஒரு தீர்த்தம்.

**தீர்த்தங்கள்:-** இத்தலத்தில் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன.

**சத்திரம்:-** இந்த முள்ளியாற்றுக்கு வடகரையில் கோட்டூர் பெருநிலக்கிழார் உயர்திரு இராவ்பகதூர் K. G. ஸ்ரீனிவாச முதலியாரவர்களின் சத்திரத்தில் அன்னமளிக்கப் படுகிறது.

**தலவிருக்ஷம்:- வன்னிமரம்.**

## தீர்த்தங்களின் விவரம்.

1. **முள்ளியாறு:-** சந்நிதிக்கெதிரில் புஷ்ய மண்டபத் துரை தீர்த்த கட்டம்.

2. **சிவகெங்கை:-** இது ஆலயத்தின் கீழ்புறம் அம்மன் சந்நிதியின் எதிரிலுள்ளது. ஐராவதம் உண்டாக்கியது. இதில் சிவபெருமான் கங்கையைப் பெருக்கிய விசேஷம் வாய்ந்தது கார்த்திகை ஞாயிறுகளில் சுவாமி தீர்த்தம் கொடுப்பார்.

3. **பிரம தீர்த்தம்**:- சிவகங்கையின் கீழ்புறமுள்ளது ஆதியில் பிரமதேவர் உண்டுபண்ணி, இதன் நடுவில் மண் எடுத்துச் சிவலிங்கம் செய்து பூசித்தார். இறந்தார் எலும்பை யிட்டால், சிவலோகம் சேர்ப்பிக்கும் பெருமையுடையது.

4. **சிவ தீர்த்தம்**:- ஐராவதம் தன் கொம்புகளால் கல்லி உண்டுபண்ணியது. (இது தெற்கு வீதியில் தஞ்சை மாநாட்டாண்மை ஆரம்பப் பள்ளிக்கு எதிரில் உள்ளது)

5. **மண்டைத் தீர்த்தம்**:- மேலக் கோட்டூருக்கும், கீழக் கோட்டூருக்கும் நடுவில் தெருவிற்கு வடபுறமுள்ளது. ஐராவதத்தின் மண்டை விழுந்த இடம்.

6. **அமுதகூபம்**:- சந்நிதிக்கு முன் திருக்குளம் என வழங்கும். இந்திரன் அமுதகடம் வைத்ததால் உண்டாகியது.

7. **இந்திர தீர்த்தம்**:- இது தேரடிக்குளம் என வழங்கும். மேலவீதிக்கு மேல்புறமுள்ளது. இங்கு பிதிரர் கடன் செய்தால் ஏழேழு தலைமுறையும் சிவகதி அடைவிக்கும்.

இதில் வைகாசி மாதம் விசாகத்தில் சுவாமி தீர்த்தம் கொடுப்பார்.

8. **விசுவகன்ம தீர்த்தம்**:- இது ஐயனர் குளம் என வழங்கும். மார்கழி மாத ஸ்நானம் விசேஷம். (இத்தீர்த்தம் மிகக்குறுகி வருகிறது)

9. **அரம்பா தீர்த்தம்**:- விசுவகன்ம தீர்த்தத்திற்குத் தெற்கே முள்ளியாற்றின் வடபுறம் தெற்குத் தெருவிலிருக்கிறது. கார்த்திகை சோமவார ஸ்நானம் விசேஷம், (இது கருப்புட்டியாள் குளம் என வழங்கும்).

சிவாலயமும், தெய்வமூர்த்தமும் மேற்கு நோக்கிய சந்நிதி. அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது.




திருப்பணி ஞாபகார்த்தக் கல்வெட்டு. 2—7—1952.

## சிவாலயமும் தெய்வமூர்த்தங்களும்

## ஆலயம் மேற்கு நோக்கிய சந்நிதி.

**மூலவர்:-** **கொழுந்தீசர்.**

**நடராஜா சபையில்:-** நடராஜா — சிவகாமி மாணிக்கவாசகர்.

கணேசர் 3.

சுப்ரமண்யம், வள்ளி-தெய்வானை, இடும்பன், பால சுப்ரமண்யம்.

மகாலட்சுமி, நவக்ருகம் 9, பைரவர், சூர்யன், திரு நாவுக்கரசர், திருஞானசம்பந்தர், அரம்பை, பார்வதி பரமேச் சுரன், பிரதோஷமூர்த்தி (இது மூலவராக இருப்பது அருமை) அர்த்தநாரீஸ்வரர், துர்க்கை, தெட்சணாமூர்த்தி.

விசேஷ லிங்கங்கள் மூன்று இருக்கின்றன. வேறு 3 பாணங்களுமிருக்கின்றன. மூலவராக தனியாய் மீனாட்சி சுந்தரேசுரர் சந்நிதி. (மூலவராக ஒன்றிருக்கிறது)

**உற்சவமூர்த்திகள்:-** தனியம்பிகை, அஸ்திரதேவர்.

வள்ளி தெய்வானை சமேத சுப்ரமண்யம், சந்திரசேகரர், அம்பாள், பிரதோஷ நாயகர், அம்பாள். சோமாஸ்கந்தர், சண்டேசுரர், சனி பகவான்.

(சைவசமயாசார்யர்கள்) அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார்.

**அம்பிகை சந்நிதி:-** கிழக்கு முகமாய் உள்ளது.

**மூலஸ்தானம்:- மதுரபாஷிணி.**

கோயில் மிகப் பழமையானதால் பாலாலயம் செய்து, கருங்கல் திருப்பணியாக மிக அழகிய சிறிய கோயிலாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

## அபிஷேகம் உற்சவ முதலியன.

1. **சித்திரைச்சதயம்:** அப்பர் சுவாமிக்கு அபிஷேகம்.

2. **வைகாசி:-** விசாகம் ரிஷப வாகனம், புனர்பூசத்தில் உற்சவாரம்பம், விசாகதீர்த்தம், மூலம் சம்பந்தர் அபிஷேகம்.

3 **ஆனி:-** உத்திரம் நடராஜா அபிஷேகம்.

4 **ஆடி:-** அயனம் பூரத்தில் விசேஷம்.

5 **ஆவணி:-** சதுர்த்தி, விநாயகர் உற்சவம், மூலம் அபிஷேகாராதனை.

6. **புரட்டாசி-** நவராத்ரி 9 நாள். விஜயதசமி.

7. **ஐப்பசி:-** துலாவிஷு, சஷ்டி உற்சவம், கேதாரி விருதம், (அர்த்தநாரீஸ்வரர் அபிஷேகம்) கார்த்திகையில் அபிஷேகம், பௌர்ணமியில் அன்னாபிஷேகம்.

8. **கார்த்திகை:-** ஞாயிறுகளில் கோயிலுக்கு கீழ்புறமுள்ள சிவகங்கையில் சுவாமி தீர்த்தங் கொடுப்பார். சோமவாரங்களில் சங்காபிஷேகம், கிருத்திகை சொர்க்கபானம், முருகனுக்கு அபிஷேகாராதனையும் நடைபெறும்.

9. **மார்கழி:-** தனுர் உஷக்காலம். திருவாதிரை உற்சவம், நடராஜா எழுந்தருளல், சுக்லபட்ச சஷ்டியில் தேவேந்திர பூசை.



கெற்பகிரகத்தின் கீழ்புறம் தெக்ஷணாமூர்த்தி மண்டபம்.

உ
சிவமயம்

# கோட்டூர்ப் புராணச் சுருக்கம்.

## கணபதி காப்பு.

கார்மேவு மதில்புடைசூழ் கோட்டூர்வாழ்
கோழுந்தீசர் கதையைச் சூத
னேர்மேவு வடமொழியான் மொழிந்தபடி
தமிழ்மொழியா லிசைக்கத் தெய்வப்
பார்மேவு திருக்கோட்டு மணிக்கோட்டுப்
பொற்கோட்டிற் பகைமே லிவர்
போர்மேவு கதையெழுது புங்கவன்பங்
கயத்திருத்தாள் போற்றல் செய்வாம்.

## வன்னிவனச் சருக்கம்.

ஆதிகாலத்தில் தானகற்பத்தில் விஷ்ணுவைத் தலைமை யாகக்கொண்டு இந்திராதி தேவரும், அசுரர்களும் கூடி அமுதம் அடையும்பொருட்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது ஆலால விஷம் தோன்றியது அவ்வேகத்தைத் தாங்காத பிரமாதி தேவரனைவரும் கைலாசபதியைச் சரண் அடைந்தனர். சிவபெருமான் அந்த விஷத்தை எடுத்து வாயிலே போட்டவுடனே, அது கீழே இறங்கினுல் எல்லா வுயிர்களும் நாசமடையுமென்று, பார்வதிதேவி கண்டத்திலே நிறுத்தியருளினுர். அதனுலே நீலகண்டர் என்று சிவபெரு மானுக்கு ஒரு பெயர் வந்தது. பிறகு தேவர்கள் திருப்பாற் கடலிலுண்டான அமுதத்தையுண்டு, பிறகு சிவபெருமானைத் தெரிசிக்க வந்தார்கள். சிவபெருமான் நந்தியினிரு கொம்பு களுக்கிடையே நர்த்தனம் செய்து தெரிசனம் தந்தருளினுர். அன்று சனிப்பிரதோஷமாகும். இதனுலே பிரதோஷம் விசேஷமும், சனிப்பிரதோஷம் அதிக விசேஷமாகும். அன்று சிவ தெரிசனம் செய்வோர் எல்லாப் பாபத்தினின்றும் நீங்கி



சிவகங்கைத் தீர்த்தத் திருப்பணியின் தோற்றம்.

தமது கருத்துகள் நிறைவேறி, முடிவில் சிவபதவியையும் அடைவார்கள். மேலும் திருப்பாற்கடலில், லட்சுமி, பஞ்ச தருக்கள், காமதேனு, சிந்தாமணி, ஐராவதம், சங்கநிதி, பதுமநிதி, பசுக்கள் முதலிய அரும்பொருள்கள் தோன்றின.

தேவர்கள் அமுதத்தைப் பொற்குடங்களில் நிரப்பிய போது அமுதம் ததும்பி ஆயிரத்தெட்டு துளிகளாகி பல விடங்களில் விழுந்தன. அவ்விடங்களில் மருது, நெல்லி பாதிரி, புன்னே, மா, பலா, அரசு, சண்பகம், கருங்காலி, வில்வம் முதலிய தெய்வாம்சமான மரங்கள் முளைத்தன. இத்தலத்தில் விழுந்த துளியோ வன்னி மரமாகி வளர்ந்தது. இதன் வித்துக்கள் பல விடங்களிலும் விழுந்து பெரிய காடாக வளர்ந்தன. இதனுல் வன்னி வனம் (சமீவனம்) என்று பெயருண்டாயிற்று. இங்கே அநேக ரிஷிகள் வந்து தவம் செய்து சித்தியும் முத்தியும் பெற்றனர். இங்கே முதலில் உண்டான வன்னிமரத்தடியில் சிவபெருமானே வன்னி பத்திரத்தால் அர்ச்சித்து பிரமதேவர் அருளடைந்தார்.

## லிங்கோற்பவர்.

முன்னெருகால் பிரமதேவர், தாமே யுலகததைப் படைக்கும் பெருமையுடையவரானதாலும்,சிவபெருமானேப் போலத் தனக்கும் ஐந்து முகங்களிருப்பதாலும், தானே பரம் என்று அகங்கரித்தார். யாவரும் சிவபெருமானேப் பரம பதியாக வழிபடுகிறுர்கள் என்று கோபமாகத் தன்னிடம் வரும் தேவர்களேயும் முனிவர்களேயும் மதியாதிருந்தார். நாரதர் சிவபெருமானிடத்தில் கூறியவுடனே சிவபெருமான் பைரவமூர்த்தியை பிரமதேவரிடம் அனுப்புவித்தார். வந்த பைரவரையு மதியாதிருக்கவே, பைரவமூர்த்தி சினந்து "சிவபெருமானுக்குச் சமானமானவர் நீயோ? படைப்புத்

தொழிலில் வல்லவரானுல் இதோ கிள்ளியெடுக்கும் உமது தலையை சிருட்டி செய்யும் பார்ப்போம்'' என்று தனது இரு விரல்களால் ஒரு தலையைக் கிள்ளி நான்முகனுக்கினுர். சிவனை மதிக்காத பெரும் பாவத்துக்குத் தண்டனையாகத் தலையிழந்தார். தானே யதைப் படைக்க முடியவில்லை. அதோடு அவர் கருவத்திற்குக் காரணமாயிருந்த படைப்புத் தொழிலும் இழக்கப்பெற்ருர். ஆகவே ஆணவம் ஒழிந்து, சிவபெருமானைத் தெரிசித்து வரம்பெறத் தவம் செய்தார். அநேக காலம் சென்று அசரீரி ''ஏ பிரமாவே பூவுலகம் சென்று சிவலிங்கம் நிறுவிப் பூசை செய்தால் உன் சிவத் துரோகம் நீங்கும்'' என்று கூறியது. உடனே சிவநாமத்தை மறவாதவராகிப் பூவுலகம் வந்து சேர்ந்து ஒவ்வொரு தலமாய்த் தெரிசித்துச் சிறந்த தலத்தை அடைய அருள்செய்ய வேணுமென்று சிவனைப் பிரார்த்தித்துவந்தார். காவிரியின் தென்கரையிலுள்ள திருப்பூந்துருத்தித் தலத்தில் அழகாலமர்ந்த நாயகி சமேத புஷ்பவனநாதரைப் பூசித்துத் தவம் செய்துவரும் தன் புதல்வரான காசிபரைக்கண்டார். முனிவரும் தந்தையை வணங்கி வந்தன வழிபாடு செய்து, பிறகு சிவாலயத்துக்குச் சென்று வழிபட்டு ஆசிரமம் வந்து சேர்ந்து தந்தையின் வரலாற்றைத் தன் ஞானக்கண்ணுல் அறிந்து தந்தைக்குச் சிறந்த தலம் எதுவென்று கூறினுர். திருவாரூருக்கு நிருதியிலே ஒரு யோசனை தூரத்தில் அகத்திய நதிக் கீழ்கரையில் வன்னி வனம் ஒன்றுண்டு. அதற்கு ஒப்பான தலமில்லை. அங்கு சென்று சிவலிங்கம் நிறுவிப் பூசை செய்தால் எல்லாப் பாவமும் நீங்கி அருள் பெறலாம் என்று கூறினுர். பிரமதேவர் ஆனந்தமடைந்து உடனே இத்தலத்தை வந்தடைந்தார், இங்கு ஒரு தடாகத்தை யுண்டு பண்ணி வேதமந்திரத்தால் மூவுலகத்திலுள்ள தீர்த்தங்களை



அரம்பை

வரவழைத்து நிரப்பினர். அதில் மூழ்கி நடுவிலிருந்து மணலெடுத்துச் சிவலிங்கம்செய்து வன்னிமரத்தடியில் பிரதிட்டை செய்து பூசித்து வன்னிபத்ரத்தால் அர்ச்சித்து நமஸ்கரித்தார். தல விசேஷத்தாலே உடனே பூசையின் பலம் கை வரப் பெற்று, சிவபெருமான் அச்சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு சுடர்க்கொழுந்தாய் தோன்றி "உன் பூசையால் மகிழ்ந்தோம். உன் குற்றத்தை மன்னித்தோம். உனது படைப்புத் தொழிலையுமருளினோம்" என்று கூறியருளினர். பிரமதேவர் ஆனந்தமடைந்து தோத்திரம் செய்தார். உடனே சிவாலயம் கட்டவேணுமென்று நினைத்து விசுவகர்மாவை நினைக்கவே, அவர் உடனே வரவும், பிரமதேவர் மேற்கு நோக்கிய சந்நிதியாக சிவாலயமும், சிவபூசகர் முதலியவர்கள் வசிக்க வீதிகளும், வீடுகளும், பசுமடம், நந்தவனமாதியன யாவும் உடனே நிருமாணிக்கக் கட்டளையிட்ட மறு கணத்திலே தேவதச்சனும் அமைத்தான். விசுவகன்மாவும் கோயிலுக்கு தெற்கே தன் பெயரால் ஒரு தீர்த்தமுண்டுபண்ணி சிவப் பிரதிட்டை செய்து பூசித்துத் தேவலோகமடைந்தார்.

பிரமதேவர் மாசி மாதம் அசுவனி நட்சத்திரத்தில் ரிஷபக் கொடியேற்றி, பத்தாம் நாள் மகத்தில் பிரம தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் நடத்தி, பிரமலோகம் சேர்ந்து முன் போல் படைப்புத் தொழிலிலமர்ந்தார்.

## இந்திரபுரமான வரலாறு.

விருத்திராசுரன் என்னும் பெயருடைய அரக்கன் தேவர்களை மிகவும் துன்புறுத்திவந்தான். தேவேந்திரன் பிரமதேவரிடம் சென்று முறையிட்டான். அவர் ததீசி முனிவரது முதுகெலும்பைப் பெற்று அதை வஜ்ராயுதமாக்கி

அவனைக் கொல்லலாமேயன்றி வேறே வழியில்லை யென்று கூறினர். அவரது முதுகெலும்பு ஏன் அவ்வளவு பலமுடைய தென்றால் திருப்பாற்கடல் கடையப் புகுமுன் தேவர்கள் யாவரும் தமது ஆயுதங்களை இம்முனிவரிடம் ஒப்புவித்துப் பத்திரமாக வைத்திருக்க வேண்டினர்கள். முனிவர் தன் வாயிலே எல்லாவற்றையும் அடக்கி வழக்கம்போல் தவத்தி லமர்ந்திருக்கவே தவாக்னியால் யாவும் உருகி முதுகெலும் பில் சேர்ந்துவிட்டன என்றும் கூறினர். இந்திரன் ததீசி முனிவரிடம் சென்று முதுகெலும்பைக் கேட்டலும் அவரும் கொடுத்தார். அதைப் பெற்று அவ்வசுரனைக் கொன்று தேவர் பயம் தீர்த்தான் இந்திரன். ஆனலும் பிரமஹத்தி தோஷம் இந்திரனைப் பிடித்தது. இதைத் தேவகுருவிடம் முறையிடவே, "நீ பூவுலகம் சென்று சிவதல யாத்திரை செய்து சிவபூசை செய்வாயானல் உன் பிரமஹத்தி தோஷம் விலகும்" என்றார். உடனே இந்திரன் இவ்வுலகிலுள்ள தலங்களைத் தெரிசித்து வந்தார். ஒருநாள் நாரதர் கண்டு வன்னிவனப் பெருமையைக் கூறி அங்கே செல்லும்படி கூறினர். இந்திரன் இத்தலத்தையடைந்து ஆலயத்துக்கு மேற்குத் திசையில் தீர்த்தமுண்டாக்கி வடகரையில் விமான மமைத்து சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தான். கோயில் பிரகாரத்தில் அமுத கும்பம் வைத்திருந்த இடத்தில் அமுத கூபம் என்றெரு தீர்த்தமுண்டாயிற்று.

இந்திரனுக்குச் சிவபெருமான் காட்சி தந்தருளி அவன் பிரமஹத்தியைப் போக்கியருளினர். அதுமுதல் இத்தீர்த்தத் தில் முழுகுவோர் பிரமஹத்தியாதி மகா பாபங்களும் நீங்கப் பெறுவாராயினர். அதனலே இத்தலத்திற்கு இந்திரபுரம் என்று ஒரு பெயருமுண்டாயிற்று,



பார்வதி — பரமேஸ்வரன்

## ஐராவதம் பூசித்தது.

இந்திர சபையில் அரம்பை, திலோத்தமை, மேனகை, ஊர்வசி, கெற்பை, சுகேசி, பரிமளை என்னும் ஏழு மாதர் களும் நடனம் செய்தார்கள். அப்போது அரம்பை களைத்து வீழ்ந்து கிடந்தபோது வாயு ஆடையைக் குலைக்க அலங் கோலமாய்க் கிடந்தாள். சபையில் இருந்த நாரதர் அவளைப் பூலோகம் சென்று வசிக்கச் சபித்தார். இதையறிந்த அரம்பை நாரதரை வணங்கித் தனக்குச் சாபவிமோசன மளிக்க வேண்டினாள். நாரதர் பூவுலகிற் சென்று சிவபூசை செய்து பாபத்தைப் போக்கிய பின் இங்கு வரக்கடவாய் என்று கூறியருளினார். உடனே அரம்பை வந்து பாலியாற்றங் கரையில் வசித்து பாடலேசுரரைப் பூசித்து வந்தாள். இவ் வாருக இந்திரன் அரம்பையைக் காணுது, விசாரித்தறிந்து, பிறகு சித்திரசேனன் எனும் கந்தருவனை அனுப்பி அழைத்து வரக் கட்டளையிட்டான். அப்படியே அவன் அரம்பையிடம் சென்று தேவலோகம் வரும்படி கூறியபோது அரம்பை சிவபெருமான் தனக்குக் காட்சிதரும் வரையில் தேவலோ கம் வரமுடியாதென்று கூறிவிட்டாள். கந்தருவனும் இதை இந்திரனிடம் தெரிவித்தான். இப்படி அரம்பைக்குப் பல நாள் வரை பாடலேசுரத்தில் சிவபெருமான் நேரில் காட்சி தராமையால் உரோமேசர் எனும் முனிவரை யணுகித் தன் குறையைக் கூறிக்கொண்டாள். முனிவர், 'சகல சித்திமுத்தி களும் எளிதில் கைகூடும்படியான தலம் வன்னிவனம் என்ற பெயரோடு காவிரிக்குத் தென்பால் விளங்குகிறது. அங்கு பிரமதேவரும், இந்திரனும் வழிபட்டு அருள் பெற்ருர் கள். அங்கு செல்க'' என்றருளினர்.

இந்நிலையில் இந்திரன் பலநாள் பொறுத்துப் பிறகு ஒருநாளில், அரம்பையைப் பூவுலகத்தினின்றும் தூக்கி வரும்படி தன் வெள்ளை யானையை ஏவினான். அந்த ஐராவதம் இத்தலத்தையடைந்து சிவபூசை செய்துவந்த அரம்பையிடம் இந்திரன் கட்டளையைக் கூறியும் முன்போலவே சிவதெரிசனம் செய்தாலன்றி வரமுடியாதென்று மறுத்துச் சிவபூசையில் கண்ணுங்கருத்துமாயிருந்தாள். ஐராவதமோ அவளைத் தூக்கவெண்ணி துதிக்கையால் சுற்றியபோது அரம்பை சிவலிங்கத்தை, மார்க்கண்டேயர்மீது பாசக்கயிறு வீசியபோது சிவலிங்கத்தைப் பற்றிக்கொண்டதுபோல் அரம்பையும் லிங்கத்தைப் பற்றிக்கொண்டாள். யானை முழு பலத்துடனும் இழுத்தது. அசைக்கவும் முடியவில்லை. சிவலிங்கத்தோடு சேர்த்துத் தூக்குவதற்காகத் தன் நான்கு (தந்தங்களாலும்) கோடுகளாலும் கல்லியவுடனே சிவ பக்தைக்குச் செய்த அபராதத்தைப் பொறுக்காத சிவபெருமானது கோபத்தால் ஐராவதம் சின்னபின்னமாகி மண்டையொருபக்கமும், கொம்பொருபக்கமும், மணியொருபக்கமுமாக வீழ்ந்தது. ஐராவதத்தையும் காணாது இந்திரன் துயரமுற்றான். ஒரு நாள் நாரதர் இந்திரசபைக்கு வர இந்திரன் துயரத்தை அறிவிக்கவே, நாரதர் ஐராவதத்தின் வரலாற்றை கூறி இந்திரனைப் பார்த்து வன்னிவனம் சென்று சிவபூசை செய்து அரம்பையையும்,ஐராவதத்தையும் அடைவாய் என்று உபாயத்தையும் கூறினார். உடனே இந்திரன் இங்கு வந்து கொழுந்தீசரைப் பூசித்து அரம்பையையும், ஐராவதத்தையும் தந்தருள விண்ணப்பித்தான். சிவபெருமான் இந்திரனுக்கும் அரம்பைக்கும் காட்சி கொடுத்தருளினார். ஐராவதத்தையும் எழுப்பியருளினார். ஐராவதம் கோட்டால் கல்லியதால் **கோட்டூர்** என்று இத்தலத்துக்குப் பெயர் வந்தது, அந்தத்



அர்த்தநாதீஸ்வரர்

தந்தங்கள் பூமியைக் கெல்லியபோது ஒரு தீர்த்தமாக உண்டாகி **நாக தீர்த்தம்** எனப் பெயர் பெற்று விளங்குகிறது. (நாகம் என்ற சொல்லுக்கு யானை என்றொரு பொருளுண்டு) அதன் மண்டையோடு விழுந்த இடம் ஒரு தீர்த்தமாகி **மண்டை தீர்த்தம்** எனப் பெயர் பெற்றது. (மண்டாகுளம் என்று வழங்குகிறது.) யானையின் மணி விழுந்த இடமோ **மணியம்பலம்** என்றொரு சிவதலமாக விளங்குகிறது. (கீழ்க்கோயில் என விளங்குகிறது) ஐராவதம் கயிலை சென்று அமுதலிங்கத்தைக்கொண்டுவந்து இந்த மணி விழுந்த இடத்தில் நிறுவிப்பூசித்து அருள்பெற்றது. இதனால் சுவாமிக்கு ஐராவதேசுரர், நாகநாதேசுரர் என்ற திருநாமங்களுண்டாயின. மேலும் ஐராவதம் ஒரு தடாகம் தோண்டவே சிவபெருமான் கங்கையைப் பெய்தருளினார். இதனாலே சிவகங்கை, நாக தீர்த்தம் என்ற இரண்டு பெயர்கள் இத்தீர்த்தத்திற்கு உண்டாயின. இத்தீர்த்தம் சர்வ பாபமும் போக்குவதாகும். இதில் கார்த்திகைப் பௌர்ணமியில் தீர்த்தமாடினால் ஆயிரம் கங்காஸ்நான பலன் கிடைக்கும். அரம்யையும் இந்திரனும் இங்கு அநேக நாள் தங்கிச் சிவனைப் பூசித்தனர். வைகாசிமீ புனர்பூசத்தில் கொடியேற்றி அஸ்த நக்ஷத்திரத்தில் ரதமும் விசாகத்திலே சிவகங்கையில் தீர்த்தவாரியையும் இந்திரன் நடத்தினான்.

சிவபெருமான் திருநடஞ் செய்தருளிய அம்பலங்கள் சிதம்பரம் முதலாக அறுபத்துநான்கு தலங்களாம். அவைகளில் இத்தலத்திலுள்ள திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் ஒன்றாகும். இங்கு ஆனிப் பௌர்ணமியில் நடராஜா நர்த்தனம் செய்தருளினார். இவ்வாலயத்தின் தெற்கில் அரம்பை தன் பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கினாள். புருஷாகாரத்தால் சிவலிங்கம் அமைத்து வணங்கினாள். இம் மூர்த்திக்கு

அ ர ம் பே ச ர் என்று திருநாமம். இதைக் கார்த்திகைமீ ரோகணியில் தெரிசித்தால் ஆயிரம் அசுவமேத யாக பலன் அளிக்கும். இம்மாதம் ஆதிவாரத்தில் முழுகின் சர்வ பாப மும் போகும். இட்டசித்தியுண்டாகும்.

பிறகு இந்திரன் இத்தலத்தை விட்டுத் தேவலோகம் சென்றபோது தேவர் பூமழை பெய்ததால் இத்தலத்திற்குப் புஷ்பநகர் என்றொரு பெயரும் வந்தது. இத்தகைய சிறப்பு களைக் கேட்ட சவுனகாதியர் சூதமுனிவருடன் இங்கு வந்து தீர்த்தங்களாடி மூர்த்திகளையும் தெரிசித்து மகிழ்ந்தனர்.

## இந்திரசேனன் அருள்பெற்றது.

காம்பீலி நாட்டில் ரவிகுல மன்னனான இந்திரசேனன் நீதியுடனாண்டு வந்தான். இவன் ஒருநாள் காட்டில் வேட்டை யாடிக் களைத்து ஒரு மரத்தடியில் தூங்கினான். கனவில் ஒரு பிரமராக்கதது ஒன்று வந்து அடிக்கவே அதன் வரலாற்றைக் கேட்டான். அது "நீ அறுபத்து நான்கு பிறவிகட்கு முன் அரசனாயிருந்தாய். உன் நண்பனான மகதநாட்டு மன்னனது ஜன்ம நக்ஷத்திரம் ஒரு சனிக்கிழமையில் வரவே, அந்தத் தோஷத்தைப் போக்கிக்கொள்ள அநேக அந்தணர்களை அழைத்து தானம் கொடுத்ததைத் தடுத்து அவர்களை நிந்தித்தாய். நீ செய்த கொடிய பாபத்தின் பயனை நீ செய் திருந்த தருமத்தினால் இதுவரை யனுபவிக்கவில்லை. அது இப்போது பிடித்தது. அறுபத்து நான்கு ஜன்மங்கட்கு உன்னை வாட்டும். பிறகு நரகமும் அனுபவிப்பாய்" என்று கூறி அவனை அப்போதே பிடித்து வாட்ட ஆரம்பித்தது. அரசன் விழித்து அறிவிழந்து மந்திரிகளிடம் நடந்ததைக் கூறினான். உடனே அரசனை அரண்மனைக்குக் கொண்டு



பிரதோஷமூர்த்தி – மூலஸ்தானம்

போய் அவனது புத்ரனுகிய சந்திரசேனனுக்கு முடி சூட்டினூர்கள். இந்திரசேனன் பேசாமலும், உண்ணுமலும், உறங்காமலும் துன்பப்பட்டான். சந்திரசேனனும் அளவில்லாத தான தருமங்களைச் செய்தும் அரசன் குணமடையவில்லை. பிறகு அசுவமேத யாகம் செய்யக் கருதி வேதகற்பன் என்னும் புரோகிதரை அழைத்து யோசித்தார்கள். அவர்கள் நன்ருயாராய்ந்து இத்தகைய கொடி பாவம் யாகாதிகளால் தீர்க்க முடியாததாகும். சிவ தீர்த்தம், சிவ தெரிசனம், சிவ தல யாத்திரையே தீராத பாவத்தைத் தீர்க்கும். அதிலும் உத்தமோத்தமாகிய சிவதலம் வன்னிவனம். அங்குசென்று பிரம தீர்த்தத்திலாடி, பிரமா நிறுவிய கொழுந்தீசரைத் தெரிசித்தால் எளிதில் நீங்கும். இதுவே உடனே செய்யத் தக்கது என்று கூறிய புரோகிதரையும், மந்திரிகளையும், திரவியங்களையும் கொண்டு இத்தலத்தை யடைந்தார்கள். வேதகற்பர் சிவசந்நிதியிலே அரசனை நிறுத்தி பிரம தீர்த்தத்தை தெளித்தவுடனே பிரமராக்கது நீங்கியது. அரசன் முன்னிலும் காந்தியுடன் விளங்கி சிவபெருமானை வழிபட்டான். வைகாசி விசாகத்தில் விசேஷ பூசைகளைச் செய்து, ஐந்து கிராமங்களைப் பூதானம் வழங்கினுன்.

113138

## சாலிகன் பிதுர்க்களை கரையேற்றியது.

சாலிகன் எனும் அந்தணன் நருமதையாற்றங்கரையில் தவம் செய்தான், அவன் தந்தை தவத்தில் காலத்தைக் கழித்தார். தாயும் உடன்கட்டையேறி இறந்தாள். அவர்கள் நற்கதி பெற வேண்டுமென நினைத்து அவர்களது எலும்புகளைக் கங்கையிலிடக் கருதி ஒரு குடத்திலடக்கி வடதிசை நோக்கிச் சென்ருன். நாரதர் எதிரே வந்தார். இவ்வரலாற்றை யறிந்த நாரதர் இவனது மாதா பிதா பக்தியை

மெச்சிப் பின் வருமாறு உபதேசித்தார். " ஏ அந்தணு உன் மாதா பிதா பக்தியை பாராட்டுகிறேன். கங்கையினும் சிறந்த தீர்த்தத்தை உனக்குத் தெரிவிக்கிறேன் அது சோழநாட்டில் வன்னிவன சிவதலத்தில் பிரம தீர்த்தமாகும். அங்கு அஸ்திகள் போடப்பட்டால் ஆத்மாக்களை கைலாசத்தில் சேர்ப்பிக்கும் என்ற உடன் நாரதரை வணங்கி அவர் கூறிய படி இத்தலத்தையடைந்து தீர்த்தக்கரையில் வந்து அதன் அருகே ஒரு குழி தோண்டி இக்குடக்தை வைக்கவே இத் தீர்த்தம் பட்டவுடனே எலும்பு சிவலிங்க வடிவத்தை அடைந்தது. அதை வணங்கி அங்கே ஒரு அரசமரத்தை வைத்து வணங்கிச் சிவபெருமானை வணங்கித் தானும் சாயுச்சியம் அடைந்தான். தாய் தந்தையரும் விமமானமேறி கயிலை அடைந்தார்கள்.

## பருந்து எலும்பைத் தீர்த்தத்திலிட்டுச் சிவபதம் அடைவித்தது.

பாலி நாட்டில் உற்பலம் என்னும் நகரில் ஒரு அந்தணர் நான்கு புத்திரர்களையும், நிறைந்த செல்வத்தையுமுடைய வராயிருந்தார். இவர் அந்தணர்க்குரிய நற் கருமங்கள் யாவையும் அறவே கைவிட்டுப் பொருளையே பெரிதாய் நினைத்திருந்தார் பாபத்தால் செல்வமெல்லாம் இழந்து ஊர் ஊராய்ப் பிச்சையெடுத்துண்டார். ஒரு நாள் சிவபூசை செய்யும் நியமம் உடைய ஒரு அந்தணர் வீட்டிலே அதிதி யாகச் சென்று அவர் செய்த சிவபூசையையும் தெரிசித்து சிவனை வலம் வந்து, சிவப் பிரசாதத்தையும் உண்டார். அதனால் இவர் பாபம் பஞ்சாய்ப் பறந்தது. பிறகு வேற் றூருக்குப் போகும் வழியில் பெருமழையிலடிபட்டு மரத்தடியில் தங்கியபோது இடி விழுந்து இறந்தார்.



ஸ்ரீ K. T. கிருஷ்ண முதலியார் அவர்களின் ஞாபகார்த்தமாக
ஸ்ரீ K. திருவேங்கட முதலியார் அவர்களால்

**திருப்பணி செய்யப்பெற்ற (உபயம்) நந்தவனத்தை**

தர்மகர்த்தா ஸ்ரீ P. சுப்பையா முதலியார் அவர்களால்

**திறப்புவிழா நடத்தப்பட்டது.**

அவ்வுடலை நாய் நரிகள் தின்றன. அவன் என்புகளில் ஒன்றை ஒரு பருந்து எடுத்துப் பறக்கும்போது வன்னி வனத்திலுள்ள பிரம தீர்த்தத்தில் தவறி விழுந்துவிட்டது. நரகத்தில் கிடந்த அவ்வந்தணனை உடனே சிவகணங்கள் சென்று நரகத்தினின்றும் மீட்டு கயிலாயம் சேர்ப்பித்தன.

இத்தலத்திலே தீர்த்தமாடி மார்கழிமீ பூர்வபட்ச சஷ்டியிலே பிரம, விஷ்ணு, இந்திராதியர் பூசிப்பர். இப்புண்ணிய தலத்தில் கொழுந்தீசரைத் தெரிசிப்போர் வேண்டிய கலங்களைப் பெற்று முடிவிலா ஆனந்த மயமான சிவபெருமானது திருவடியிலே வாழ்வார்கள்.

இத்தலத்தில் அபிஷேக அர்ச்சனைகட்குத் தனிக் கட்டணமில்லை. பக்தர்களின் இஷ்டப்படி நடக்கும்.

**நிர்வாக அதிகாரி:–** திரு. S. **நாகசுப்பிரமணியன்** அவர்கள் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்.

இத்தலம் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் ஒன்றுடையது. க்ஷேத்திரக்கோவையிலும் பாடல்களுள்ளன. உமாபதி சிவாச்சார்யார் அருளிய திருப்பதிகக் கோவையுமுண்டு. பெரியபுராண மருளிச்செய்த சேக்கிழார், ஞானசம்பந்தர் "கோட்டூரும் வணங்கியேத்தி திருவெண்டுறை தொழச் சென்றார்" என்று கூறியுள்ளார்.

கீழ்க்கோட்டூர் மணியம்பலம் கருவூர்த்தேவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிசைப்பாவில் 11 திருப்பாடல்களை உடையது.

இத்தலபுராணம் தமிழில் மிக்க சுவையுடையதாய் 9 சருக்கங்களையும் 367 பாடல்களையுங்கொண்டது. ஆசிரியர் பெயர் அறியமுடியாமலிருக்கிறது. இது திருக்களர், தி. மு. சுவாமிநாத உபாத்தியாயர் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது.

இத்தலத்தைப்பற்றித் திருக்களர்ப் புராணத்திலும் பாராட்டப்பட்டிருத்தல் விசேடம்.

## இத்தலத்தின் நந்தவன உபயம்.

இந்தக் கோயிலின் வடபுறமாக கோட்டூர் பெருநிலக்கிழார் காலஞ்சென்ற உயர்திரு K T. **கிருஷ்ண முதலியார்** அவர்களின் ஞாபகார்த்தமாக **நந்தவன கைங்கர்யம்** சிறந்த முறையில் ஷையார் குமாரர் உயர்திரு K. **திருவேங்கட முதலியார்** அவர்களால் சுமார் ரூபாய் 3000 செலவில் உபயமாக செய்யப்படிருக்கிறது.



ஸ்ரீ **K. T.** கிருஷ்ண முதலியார் அவர்களின் ஞாபகார்த்தமாக
ஸ்ரீ **K.** திருவேங்கட முதலியார் அவர்களால்
**திருப்பணி செய்யப்பெற்ற (உபயம்) நந்தவனத்தை**
தர்மகர்த்தா ஸ்ரீ **P.** சுப்பையா முதலியார் அவர்களால்
**திறப்புவிழா நடத்தப்பட்டது.**

# திருக்கோட்டூர் தேவாரப் பதிகம் (ஒன்று)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருளியது.

பண்—நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே யொற்றைவிடைச்
சூலமார் தருகையனே துன்றுபைம் பொழில்கள் சூழ்ந்தழகாய
கோலமா மலர் மணங்கமழ் கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்
சால நீடலமதனிடைப் புகழ் மிகத்தாங்குவர் பாங்காலே. (1)

பங்கபம் மலர்ச் சீரடிப் பஞ்சுறு மெல்விர லரவல்குல்
மங்கைமார் பலர்மயில் குயில் கிளியென மிழற்றிய மொழியார்மென்
கொங்கையார் குழாங்குணலை செய் கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழு
[வார்கள்
சங்கை யொன்றிலராகிச் சங்கரன் றிருவருள் பெற வெளிதாமே. (2)

நம்பனார் நல மலர்கொடு தொழுதெழு மடியவர் தமக்கெல்லாம்
செம்பொனார் தருமெழிறிகழ் முலையவர் செல்வ மல்கிய நல்ல
கொம்பனார் தொழு தாடிய கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்
அம்பொனார் தரு முலகினி லமரரோ டமர்ந்தினி திருப்பாரே. (3)

பலவு நீள்பொழிற்றீங்கனி தேன் பலா மாங்கனி பயில்வாய
கலவு மஞ்ஞைகணிலவு சொற்கிள்ளை களன்னஞ் சேர்ந் தழகாய
குலவு நீள்வயற் கயலுகள் கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்
நிலவு செல்வத்தராகி நீணிலத்திடை நீடியபுகழாரே. (4)

உருகு வாருள்ளத் தொண்சுடர் தனக்கென்று மன்பரா மடியார்கள்
பருகு மாரமுதென நின்று பரிவொடு பத்திசெய் தெத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளு மகலும் போயவனருள் பெறலாமே. (5)

துன்று வார்சடைத் தூமதி மத்தமுந் துன்னெருக்கார் வன்னி
பொன்றி னார்தலைக் கலனொடு பரிகலம் புலியுரி யுடையாடை
கொன்றை பொன்னென மலர்தரு கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழு
[வாரை
என்று மேத்துவார்க் கிடரிலை கேடிலை யேதம் வந்தடை யாவே. (6)

மாட மாளிகை கோபுரங் கூடங்கண் மணியரங் கணிசாலை
பாடு சூழ்மதிற் பைம்பொன் செய்மண்டபம் பரிசொடு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்
கேட தொன்றிலராகி நல் லுலகினிற் கெழுவுவர் புகழாலே. (7)

ஒள்கொள் வாளெயிற் றரக்கனவ் வுயர்வரை யெடுத்தலு முமையஞ்சிச்
சுளிய வூன்றலுஞ் சோர்ந்திட வாளொடு நாளவர்க்கருள் செய்த
குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தினைத் தொழு
[வார்கள்
தளிர்கொள் தாமரைப் பாதங்க ளருள்பெறுந் தவமுடையவர் தாமே. (8)

பாடி யாடுமெய் பத்தர்கட் கருள்செயு முத்தினை ப்பவளத்தைத்
தேடி மாலயன் காணவொண் ணா தவத் திருவினைத் தெரிவைமார்
கூடி யாடவர் கைதொழு கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்
நீடு செல்வத்தராகி யிவ்வுலகினி னிகழ்தரு புகழாரே. (9)

கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர் நற்கொழுந்தினைச் செழுந்
திரளைப்
பூணல் செய்தடி போற்றுமின் பொய்யிலா மெய்யநல்லறு ளென்றும்
காண லொன்றிலாக் காரமண் டேரர் குண்டாக்கர் சொற் கருதாதே
பேணல் செய்தரனைத் தொழு மடியவர் பெருமையைப் பெறுவாரே. (10)

பந்துலா விரற் பவளவாய்த் தேன்மொழிப் பாவையோ டுழுவாரும்
கொந்துலா மலர் விரிபொழிற் கோட்டூர் நற்கொழுந்தினைச் செழும்பவளம்
வந்துலாவிய காழியுண் ஞான சம்பந்தன் வாய்ந்துரை செய்த
சந்துலாந் தமிழ் மாலைகள் வல்லவர் தாங்குவர் புகழாலே. (11)

திருச்சிற்றம்பலம்.



திருப்பணிக்கு முன்னுள்ள பூரா தோற்றம்.

## திருஞானசம்பந்தர்-க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டூர்மடப் பாச்சி லாச்சிராம
முண்டீச்சரம் வாதவூர் வாரணசி
காட்டூர் கடம்பூர் படம்பக்கங் கொட்டுங்
கடவலாற்றியூர் மற்றுறையூ ரவையுங்
**கோட்டூர்** திரிவாமாத்தூர் கோழம்பமுங்
கொடுங் கோவலூர் திருக்குண வாயில்

## திருநாவுக்கரசு நாயனார்-க்ஷேத்திரக்கோவை

திருத்தாண்டகம்.

ஆரூர் மூலட்டான மானைக்காவு
மாக்கூறிற் றுன்றேன்றி மாடமாவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும்
பெருந்துறை காம்பிலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கை வீரட்டானமுங்
**கோட்டூர்** குடமூக்குக் கோழம்பமும்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
கயிலாய நாதனையே காணலாமே.

## சுந்தரமூர்த்தி நாயனார்-ஊர்த்தொகை

பண்-பழம்பஞ்சுரம்.

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
**கோட்டூர்** கொழுந்தே யழுந்தூரரசே கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட்டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.

**சைவசமய குரவருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த**

## திருப்பதிகக்கோவை.

கடைமுடியே யோணகாந் தன்றளிகோட் டூர்வை
கன்மாடக் கோயிலிடை யாறுபழை யாறை
வடதளிநற் றிணைநகரங் கோணமா மலைசீர்
வன்னியூர் கருவிலிய னேகதங்கா வதநல்
லிடமேவு கடிக்குளநற் றிருக்களறென் றி வைகட்
கிரும்பதிக மொவ்வென்றன் றிசைத்திடுக விப்பால்
குடவாயில் புனவாயி றூங்கானை மாடங்
கோழம்ப மவளிவண ல்லூர்கோலக்காவே.

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்டுறையோ டழகே
தருகொள்ளம் பூதூர்பே ரெயில்கொள்ளிக் காடு
கண்டருதெங் கூர்நெல்லிக்கா நாட்டியத்தான்குடியே
காறாயில் கன்றாப்பூர் வலிவலங்கச் சினத்தோ
டண்டர்பிரான் கோளிலிதென் றிருவாய்மூர் மறைக்கா
டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந்தென் கரையி
லெண்டருநாற் றிருபத்தே ழிப்பாலீ ழத்தி
லிசைகோண மாமலைகே தீச்சரமென் றிரண்டே.

**பெரிய புராணம் என வழங்கும்.**

## திருத்தொண்டர் புராணம்

நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து
நலங்கொடிருக் காறாயி னண்ணி யேத்திப்
பைம்புனன்மென் பணைத்தேவூ ரணைந்து போற்றிப்
பரமர்திரு நெல்லிக்காப் பணிந்து பாடி
யும்பர்பிரான் கைச்சினமும் பரவித் தெங்கூ
ரோங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும் போற்றிச்
செம்பொன்மதிற் **கோட்டூரும்** வணங்கி யேத்தித்
திருமலிவெண் டுறைதொழுவான் சென்று சேர்ந்தார்.



திருப்பணிக்கு முன்னுள்ள சுவாமி கோயில் தோற்றம்.

## திருக்களர்ப் புராணம்.

*முனிநதிக் கரையி லெய்தியந் நதியின் முறைமையான*
*மூழ்கியாங் கியைந்த*
*பனிமதிச் சடைபோன்* **மகிழயிராப தேச்சுர**
*நகரினைப் பரவித்*
*தனிமுதற் பரனோ டுமையையும் விதியாற்*
*றக்கபூசனை புரிந்தரசன்*
*மனமுறத் தொழுது பாரிசாதவன மாநகர்*
*மருவினன் வணங்கி.*

(அயிராபதேச்சுரம்—வெள்ளையானை பூசித்ததால் கோட்டூர்க்கு வந்த மற்றொரு பெயர் என்பது புராணத்தில் கண்டது)

இத்தலத்தில் விளங்கும் கீழக்கோயில் திருக்கீழ்க் **கோட்டூர்** மணியம்பலம்.

கருவூர்த் தேவரால், திருவிசைப்பா பாடப் பெற்றுத் திருமுறைகளிலொன்றாகப்பெற்ற சிறப்புடையது.

### பதிகம் 1 (பாட்டு 2)

திருச்சிற்றம்பலம்.

1 *தளரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச்*
*சடைவிரித் தலையெறி கங்கைத்*
*தெளிரொளி மணிநீர்த் திவலைமுத் தரும்பித்*
*திருமுக மலர்ந்துசொட் டட்டக்*
*கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங்*
*கெழுவுகம் பலைசெய்கீழ்க்* **கோட்டூர்**
*வளரொளி மணியம் பலத்துணின் றாடு*
*மைந்தனென் மனங்கலந்தானே.*

2 சித்திரின் ருடு மரிவையர் தெருவிற்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துணின்ருடு
மைந்தனை யாரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிநவ மணிநெடு மாலை
பெரியவர்க் ககலிரு விசும்பின்
முத்தியா மென்றே யுலகரேத் துவரேன்
முகமலர்ந் தெதிர்கொளுந் திருவே.

**உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிய**
**சிவக்ஷேத்திர**

## சிவநாமக் கலிவெண்பா.

... ... கண்டமுதை
வாட்டு மதுரவசனியுடனே மகிழ்ந்து
கோட்டூர் மருவுங் கொழுந்தீசா (177)

வாழ்த்து.

மன்னுகா விரிதான் வாழி வளவன்சோ ணுடு வாழி!
கன்னலங் கழனி சூழுங் கமழ்ந்திருக் கோட்டூர் வாழி!
முன்னிய பவள வாய்த்தேன் மொழிகொழுந் தீசர் வாழி!
பன்னிய புராணம் வாழி பார் முழு தூழி வாழி!

திருச்சிற்றம்பலம்.

113138

சுபம்.

ராஜேஸ்வரி பிரஸ், காந்தி ரோடு, மன்னார்குடி.

7c
5/10
8B
4-8

ராஜேஸ்வரி பிரஸ், மன்னார்குடி.